1981 ஏப்ரல் 16]

செல்லப்பட்டு, அவருடைய வீட்டில் அது சேகரித்து வைக்கப்பட்டு இருந்து இருக்கிறது. அவர் வீட்டில் இருந்த எல்லாவற்றையும் கைப்பற்றி இருக்கிறோம். அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. செம்மலை: பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற மருந்துகள் களவாடப்படுவது சேலத்தில் மட்டுமல்லாமல் சென்னை போன்ற இடங்களில் உள்ள பெரிய மருந்துவமனைகளி லும் களவு செய்யப்படுகின்றன என்கிற செய்தி வந்திருக்கிறது. பெரிய மருத்துவமனைகளில் குறைந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செக்யூரிட்டி போர்ஸ் இருப்பதால் தான் இத்தகைய நிலைமைகள் உள்ளன என்று சொல்லப்படுகிறது. எனவே, மருத்துவமனை களில் மருந்துகள் களவாடுவதைத் தடுப்பதற்காக இது போன்ற பெரிய மருத்துவமனைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகப் படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, பல்லாண்டுகாலமாக இப்படி மருந்துகள் மருத்துவமனையில் இருந்து களவாடப்பட்டுக்கொண்டும், அவ்வப்போது அவைகள் கண்டுபிடிக்கப்பட்டும் வருகின்றன. அவற்றை இப்போது படிப் படியாகக் கண்டுபிடித்துக்கொண்டு வருகிறோம். இப்போதுகூட இப்படி களவாடப்பட்டவைகளைக் கண்டுபிடிக்கக் காரணம் அந்த இலாகா அலுவலர்களைக் கூப்பிட்டுச் சொல்லியிருக்கிறோம் கடுமையான முறையில் இப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும், ஒவ்வொரு டிப்பார்ட்மென்டிலும் சரியான முறையில் கண்காணிப்பு இருக்க வேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறோம். டீன் கான்பரன்ஸ், டி. எம். ஓ கான்பரன்ஸ் ஆகியவைகள் நடக்கின்றபோது நேரடியாக இது குறித்து அறிவுறுத் தப்பட்டு, யாரும் மருந்துகள் திருடிக்கொண்டு போக முடியாத அளவிற்குக் கடுமையான முறையில் கண்காணிப்பு நடவடிக்கை இருக்கவேண்டும் என்றும், அதற்காக சில செக்யூரிட்டி மெஷர்ஸ்ஸும் எடுத்து இருக்கிறோம். அவைகள் என்ன என்பதை இங்கே தெரிவிப்பது உகந்தது அல்ல என்பதையும் கூறிக்கொள் கிறேன்.

'நித்ய கல்யாணி' மூலிகை ஏற்றுமதி.

*வினா எண். 764—திரு. வேடசந்தூர் வி. பி பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் இருந்து ''நித்ய கல்யாணி'' மூலிகை ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அந்த ஏற்றுமதி தனியார்களால்செய்யப்படு கிறதா? அரசு மூலமே செய்யப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) தனியார்களால் செய்யப்படுகிறது. அரசு மூலம்செய்யப் படவில்லை.

[1981 ஏப்ரல் 16

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, இந்த 'நித்யகல்யாணி' என்ற மூலிகை புற்றுநோயைத் தீர்க்கும் மருந்து என்று கருதப்படுவதால் வெளிநாடுகளில் நிறைய கிராக்கி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதை விவசாயிகள் பயிரிடுகிறார்கள். அவர்களிடமிருந்து தனியார்கள் குறைந்த விலைக்கு வாங்குவதால் விவசாயிகளுக்கு இதிலே உற்சாகம் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, தமிழக சர்க்கார் ஒரு மூலிகை வாரியம் அமைத்து, அந்த வாரியத்தின் மூலம் இந்த மூலிகையை வாங்கவும், வாரியமே பெருமளவில் பயிர் செய்யவும் அவைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இது நல்ல சிறந்த யோசனை. அரசாங்கம் இந்த யோசனையை ஏற்றுக் கொண்டு, மூலிகை வாரியத்தின் எல்லைக்குள் இதைக் கொண்டுவர முடியுமா என்பதை பரிசீலிக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த நித்தியகல்யாணி என்ற மூலிகை பல்வேறு நோய்களைத் தீர்க்கக்கூடிய மருந்துகளின் மூலப்பொருள் என்ற முறையிலே அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே இதைப் பயிரிடும் விவசாயிகள் கடந்த காலத்தில் அதிகவிலை கிடைத்ததால் ஏராளமாகப் பயிர் செய்தார்கள். ஆனால் அடுத்த ஆண்டில் வாங்க ஆள் இல்லாமல் அவைகளைக் குப்பையிலே போடும் நிலைமை வந்துவிட்டது. ஆகையால் இந்த மூலிகைகளை வாங்கிப் பயன்படுத்தும் வகையில் ஏதாவது செய்ய முடியுமா ? அமைச்சரவர்கள் சொன்னதைப் போல மூலிகைப் பண்ணை மூலம் இந்த மூலிகைகளை வாங்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, வேர்களிலிருந்து கிடைக்கும் 'வின் பிளாஸ்டின்' எப்படி புற்றுநோய்க்குப் பயன்படுத்துவது என்ற ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கிறது. இன்னும் ஆராய்ச்சி நிலையிலேதான் இருக்கிறது. சில நேரங்களில் ஆராய்ச்சியாளர்கள் ரொம்ப அக்கரைகாட்டுவார்கள், சில நேரங்களில் அந்த அக்கரை குறைந்துவிடும். The root of the Plant was sold at Rs.10 per kilogram 10 years ago. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல இப்போது அதன் விலை மிகவும் குறைந்திருக்கிறது ; கிலோவுக்கு ஒரு ரூபாய்தான் கிடைப்பதாகத் தெரிகிறது. அதோடு திருநெல்வேலி மாவட்டத்தில் இந்த மூலிகைகள் நிறைய பயிரிடப்படுகிறது. அது மட்டுமல்ல. சௌத் ஆப்பிரிக்காவின் ஒர்ல்டு காம்படிஷன் இருப்பதால் விலை குறைந்திருக்கிறது. நாமே இதற்கு ஏதாவது செய்யலாமா என்று பார்த்தால் நம்மிடம் ஆராய்ச்சி வசதி இல்லை. முடியுமானால் முயற்சி செய்து பார்க்கலாம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 16]

திரு. க. இரா. சின்னராசு : தலைவரவர்களே, இந்த நித்திய கல்யாணி மூலிகைக்கு இந்தப் பெயர் எப்படி வந்தது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஆராய்ச்சி நேரம் அல்ல; கேள்வி நேரம்.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, இந்த நித்தியகல்யாணி மட்டுமல்ல ; தமிழ்நாட்டில் இருக்கிற இன்னும் எத்தனையோ மூலிகைச் செடிகள் சித்த வைத்தியம் மூலம் பல நோய்களைத் தீர்த்து இருக்கிறது மட்டுமல்லாமல் அலோபதி மருந்துகளைவிட சிறந்தமுறையில் வேலை செய்கின்ற சித்த வைத்திய முறை மருந்துகள் இருக்கின்றன என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். ஆகவே, உலகம் முழுவதும் நம்முடைய சித்த வைத்தியமாகிய தமிழ் மருத்துவம் பரவ நித்தியகல்யாணி போன்ற மூலிகைகளை அரசு ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் ஒரு முக்கியமான விஷயத்தை கவனத்தில் கொள்ளவில்லை. இந்த சித்த வைத்தியத்தில் மூலிகைகளின் 'அல்கோலாயிட் எக்ஸ்ட்ராக்டை' எடுத்துத்தான் பயன்படுத்து கிறார்கள், அந்த எக்ஸ்ட்ராக்ட் எடுக்கும்முறை நம்நாட்டில் இல்லை ; மேல்நாட்டில் இருக்கிறது ; அங்கேதான் அநேகமாக ''மாடர்ன் மெடிசன்ஸ்'' தயாரிக்கிறார்கள். மூலிகைகளின் எக்ஸ்ட்ராட்களை எடுத்து 'மாடர்ன் மெடிசினை' ப்போலதயாரித்து, அதனுடைய திறனை வெளிப்படுத்தினால் தான் உலகம் ஏற்றுக் கொள்ளும். அப்படிப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சி இந்தியாவில் இல்லை; வெளிநாட்டில்தான் இருக்கிறது. ஆகவே, அவர்கள் இங்கே இருந்து எடுத்துச்செல்கிற மூலிகைகளிலிருந்து 'அல்கோலாயிட் எக்ஸ்ட்ராக்டை' எடுத்து மருந்து தயாரித்து, அது நம்முடைய நாட்டுக்கு வருகிறது. மூலிகைப் பண்ணையில் இத்தகைய மூலிகைகளை ஏராளமாக வளர்க்க வேண்டுமென்று இருந்தாலும் மார்க்கெட் கிடைப்பதில் தாமதம் ஏற்படுகிறது, என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன்.

Persons selected as Assistant Surgeons

*Q. No. 765 THIRU S. RAJARAMAN : Will the Hon. the Minister for Health be pleaesd to state :

(a) Whether a large number of Assistant Surgeons selected by the Tamil Nadu Public Service Commission, have not joined service in recent years; and

(b) if so, the details thereof ?